மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இன்றைக்கு எவ்வளவு தூரத்தில் நீராதாரம் கிடைத்தாலும், அந்த நீராதாரத்தை வைத்து, கட்டப்பட்டிருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் கொண்டு வர வேண்டியது அவசியம் என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், ஆய்வுப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டது. அந்த ஆய்வுப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை போதாது என்று சொன்னால், நிச்சயமாக அதையும் அரசு ஆய்வு செய்யும் என்று தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். இன்றைக்கு அங்கே வழங்கப்பட்டு இருக்கிற தண்ணீர் குடிப்பதற்குச் சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், குகன்பாறை கிராமத்தில் மட்டும் இன்றைக்கு 5 கையிறைப்பான்கள் இருந்து வருகின்றன. அந்த 5 கையிறைப்பான்களில் 2 கையிறைப்பான்களிலிருந்து வருகின்ற நீர் குடிக்கக்கூடிய தன்மையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது, என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலே. அதேபோல், ஒரு திறந்தவெளி கிணறும் இருக்கிறது. அதிலேயிருந்து கிடைக்கப்பெறுகின்ற நீரும் குடிப்பதற்கு தகுந்ததாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். நிச்சயமாக இந்த ஆண்டே இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவை அரசு ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 337, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

337–

சிறுவாணி அணைக்கட்டு நீர் வழங்கும் பணியைப் பராமரிக்கும் பொறுப்பை கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் ஒப்படைத்தல்.

22361--திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குக் குடிநீர் வரும் சிறுவாணி அணைக்கட்டு நீர் வழங்கும் பணியைப் பராமரிக்கும் பொறுப்பை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும்?

1994 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 23-11-1993 நாளிட்ட அரசு ஆணையின்படி நகருக்குள் குடிநீர் விநியோகம் செய்வதும் அதன் பராமரிப்பும் கோவை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், அணைக்கட்டில் இருந்து நீர் எடுப்பது, அதை சுத்திகரிப்பு செய்வது, கோவை மாநகரத்திற்கும், இதர ஊர்களுக்கும் குழாய் மூலம் எடுத்து செல்வது போன்றவைகளைப் பராமரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கோவை மாநகராட்சியில் உள்ள என்ஜினியர்கள், துணை என்ஜினியர்கள் மராமத்துப் பணிகள் மட்டுமின்றி, எல்லாப் பணிகளுக்கும் நியமிக்கப்பட்டு, அவர்கள் இன்று பணியாற்றி வருகிறார்கள். இந்த சிறுவாணி அணைக்கட்டிலிருந்து நீர் வழங்கும் திட்டத்தில், இன்றைக்கு மாநகராட்சி முழுவதும் நீர் வழங்குவதோடு, வரும்வழிகளில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், எல்லா இடங்களுக்கும் நீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சுத்திகரிப்புப் பணிகளைச் செய்தாலும், அந்தப் பணிகளைப் பார்ப்பதற்கு மாநகராட்சியும் ஊழியர்களை நியமித்துள்ளார்கள். இப்படி இரண்டு பக்கமும் ஊழியர்களை நியமித்து அதிகச் சம்பளம் செலுத்துவதைக் கணக்கில் கொண்டு, மாண்புமிகு அமைச்சரிடத்திலே இந்த இரண்டு துறைகளும் இருக்கின்ற காரணத்தால், மாநகராட்சியே அணையிலிருந்து நீரைக் கொண்டு வந்து, மாநகருக்கு வழங்குகின்ற அனைத்துப் பணிகளையும் செய்வதற்கு, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கனவே உலக வங்கி அப்ரைசல் கமிட்டி என்று சொல்கிற, உலக வங்கியினுடைய 'Appraisal machinery, that is, the World Bank's Appraisal Mission' தற்போது, குடிநீர் வழங்குகின்ற தலைமையிடப் பராமரிப்பு, சுத்திகரிப்புப் பணியிடம், டிரிட்மென்ட் பிளான்ட் மற்றும் நீரேற்றும் பணிகள் ஆகியவை கோவை, மதுரை மற்றும் சேலம் போன்ற பெருநகரங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு உலக வங்கியிடத்திலேயிருந்து பெரும் தொகையை நாம் நம்முடைய பணிகளுக்காகப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் பல்வேறு

ஆலோசனைகளை அரசுக்கும் வாரியத்திற்கும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான், இன்றைக்கு நான் ஏற்கனவே குறிப்பிட்ட அந்த தலைமையிடப் பராமரிப்பு, டிரிட்மென்ட் பிளர்ன்ட் பராமரிப்பு, சுத்திகரிப்புப் பணியிடம், நீரேற்றும் பணிகள், இவைகளை எல்லாம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே ஒப்படைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது, இன்றைக்கு கோவை மாநகரத்திற்கு மட்டும், இப்போது அரசு ஆணைப்படி அங்கேயே தண்ணீர் விநியோகம் செய்வது, அந்த மாநகராட்சிக்குள்ளே தண்ணீர் விநியோகம், that is, distribution-ஐ மட்டும் கோவை மாநகராட்சி மேற்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. ஆகவே, இதிலே எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரையில், இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறினார்கள். நான் பிரச்சினைக்காகக் கூறவில்லை. மாநகராட்சி விநியோகிக்கின்றபோது, அதில் ஏற்படுகின்ற தடங்கல்கள், பணிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய உயர் அதிகாரிகளை அணுகி, பேசி, அவர்கள் செய்ய வேண்டியுள்ள காரணத்தால், குடிநீர் விநியோகிக்கின்ற முறைகளில் காலதாமதம் ஏற்படுவதற்கு வாயப்பு உண்டு. இந்த நிலையை மாற்றி, முழுக்க முழுக்க, குடிநீர் பிரச்சினை முழுவதையும், அணையிலிருந்து கொண்டு வருவது முதல், சுத்திகரிப்பு செய்வது வரை, அனைத்துப் பணிகளையும் மாநகராட்சியே செயல்படுத்துகின்றபோது, செம்மையாக, சிறப்பாகச் செயல்படுகின்ற அந்த மாநகராட்சி மீண்டும் சிறப்பாக இதைச் செயல்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சரிடத்திலே இந்த இரண்டு துறைகளும் இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய மேற்பார்வையில் இருக்கிற அதிகாரிகள் எந்தத் தவறும் செய்வதற்கு இவர் விடமாட்டார் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தால், அவர்கள் இதை மாநகராட்சிக்கு ஒப்படைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், ஆண்டாண்டுக் காலமாக இந்த வாரியம் இருந்துவருகிறது. பல கோடிக்கணக்கான ரூபாய்த் திட்டங்களை இந்த வாரியம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், வாரியத்திலே இருக்கிற பொறியாளர்களையும், மாநகராட்சியிலே இருக்கிற பொறியாளர்களையும் எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், மாநகராட்சியிலே அவ்வளவு

1994 ஏப்ரல் 21]

எக்ஸ்பர்டைஸ் இல்லை என்று தெரியப்படுகிறது. இன்றைக்கு மாநகராட்சியிலே இருக்கிற பொறியாளர்களுடைய தன்மை, அவர்களுடைய எக்ஸ்பீரியன்ஸ், இவைகளை எல்லாம் பார்க்கிறபோது, இப்படிப்பட்ட பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் வாரியத்திடம் இருப்பதுதான் நல்லது என்ற நல்ல முடிவை அரசு மேற்கொண்டிருக்கிறது. காரணம், சில பெரிய பிரச்சினைகளை மேற்கொள்கின்றபோது மாதக் கணக்கில் குடிநீர் வழங்கமுடியாத நிலை எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் கார்ணத்தினாலேதான் அரசு சிந்தித்து இப்படிப்பட்ட பெரிய குடிநீர் திட்டங்களை எல்லாம் தன்னகத்தே பலதரப்பட்ட பொறியாளர்களைக் கொண்டிருக்கிறது. பலதரப்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. திறம்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்கள் இதை எடுத்து மெயின்டெயின் செய்தால்தான் இது சிறப்பாக இருக்குமென்பதை கருத்திலே கொண்டுதான் இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல உத்தரவை அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 338, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

338--

சிற்றார் காலனி இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை வழங்குதல்

*20174–திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிற்றார் காலனியில் உள்ள இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை அளிக்க மறுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அகதிகளின் வாரிசுக்கு வேலை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிற்றார் காலனியில் உள்ள ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை